# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை



மானியக் கோரிக்கை
எண்: 32



## அறிவிப்புகள் 2022 - 2023

## சி.வி.கணேசன்

தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

மானியக் கோரிக்கை எண்.32

## அறிவிப்புகள்
## 2022 – 2023

**சி.வி. கணேசன்**
தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

## 1) இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு புதியதாக 11 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் துவக்கப்படும்.

இளைஞர்களுக்கு, பயனுள்ள வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதற்கும் தொழிற்சாலைகளுக்கு ஏற்றவாறு இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து வேலைவாய்ப்பை உருவாக்கிடவும் கடலூர் மாவட்டம் – மங்களூர், சிவகங்கை மாவட்டம் – மானாமதுரை, திருவண்ணாமலை மாவட்டம் – செய்யாறு, விருதுநகர் மாவட்டம் – திருச்சுழி, திருவள்ளூர் மாவட்டம் – கும்மிடிப்பூண்டி, திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம், இராமநாதபுரம் மாவட்டம் – கடலாடி, தருமபுரி மாவட்டம் – அரூர், கிருஷ்ணகிரி மாவட்டம் – தேன்கனிக்கோட்டை, பெரம்பலூர் மாவட்டம் – குன்னம், கோயம்புத்தூர் மாவட்டம் - வால்பாறை ஆகிய 11 இடங்களில், புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 97.55 கோடி ரூபாய் செலவில் துவக்கப்படும்.

## 2) அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் தமிழ் மொழியில் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில், 91 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், ஆண்டுதோறும் சுமார் 25,000 மாணவர்கள் சேர்க்கை செய்யப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இம்மாணவர்கள் பயன்படுத்தும் பாடப்புத்தகங்கள் ஆங்கில மொழியில் உள்ளன. திறன் பயிற்சிகளை எளிதில் புரிந்து கொள்ளும் பொருட்டு, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் அனைத்து பயிற்சியாளர்களுக்கும், 6.80 கோடி ரூபாய் செலவில் தமிழில் பாடப்புத்தகங்கள் வழங்கப்படும்.

3) அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உபயோகமற்ற மற்றும் சீர் செய்ய இயலாத நிலையில் உள்ள இயந்திரங்கள், கருவிகள் மற்றும் தளவாடங்கள் மாற்றப்பட்டு புதியதாக நிறுவப்படும்.

தற்போதைய மாறிவரும் தொழிற் சாலைகளின் தொழில் நுட்பங்களுக்கு ஏற்றவாறு நவீன இயந்திரங்கள், கருவிகள் மற்றும் தளவாடங்கள் மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் 57 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சீர் செய்ய இயலாத மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள இயந்திரங்கள், கருவிகள் மற்றும் தளவாடங்களை மாற்றி 20 கோடி ரூபாய் செலவில் புதிய இயந்திரங்கள், கருவிகள் மற்றும் தளவாடங்கள் நிறுவப்படும்.

## 4) தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதி உயர்த்தி வழங்கப்படும்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், தனியார் துறை நிறுவனங்களில் அதிகளவில் பணி நியமனம் பெற, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் நடத்தும் பெரிய அளவிலான ஒவ்வொரு வேலைவாய்ப்பு முகாமிற்கும் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் 1 இலட்சம் ரூபாயினை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கான மொத்த செலவினம் 3.04 கோடி ரூபாய் ஆகும்.

5) மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டங்களுக்கு ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்படும் 2 கோடி ரூபாய் நிதி 4.88 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களது அரசுப்பணி கனவை நனவாக்கும் வகையில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் இயங்கிவரும் தன்னார்வ பயிலும் வட்டங்களால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகளை மேலும் சிறப்பாக நடத்தவும், மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் மென் பாடக் குறிப்புகளின் தரத்தை மேம்படுத்தவும், ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்படும் 2 கோடி ரூபாயுடன் கூடுதலாக 2.88 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மொத்தம் 4.88 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

6) தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 500 பெண் ஓட்டுநர்களுக்கு புதியதாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்கும் பொருட்டு தலா 1 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் ஓட்டுநர்கள், சொந்தமாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்குவதை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான சுய தொழில் வாய்ப்பினை உருவாக்கவும், அவர்களின் வருமானம் ஈட்டும் திறன் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டும், 500 பெண் ஓட்டுநர்களுக்கு புதியதாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்கும் செலவினத்தில் தலா 1 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும். இதற்கான மொத்த செலவினம் 5 கோடி ரூபாய் ஆகும்.

7) சட்டமுறை எடையளவுச் சட்டத்தின் கீழ் எடைகள் மற்றும் அளவைகளை மின்னணு முத்திரையிடுதல் பணியை மேற்கொள்ள சட்டமுறை எடையளவுப் பிரிவு கணினிமயமாக்கப்படும்.

தொழில் முனைவோர், தங்கள் தொழிலை சுமுகமாகவும், சிரமமின்றி நடத்தவும், முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை தமிழ்நாட்டில் உருவாக்கவும் "தொழில் நடத்துவதை எளிதாக்குதல்" எனும் முயற்சியை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக கடந்த 23.02.2022 முதல், எடைகள் மற்றும் அளவைகளை இணையதளம் வாயிலாக மின்னணு முத்திரையிடும் முறை தொழிலாளர் துறையால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இணையதளம் வாயிலாக சட்டமுறை எடையளவுச் சட்டத்தின் கீழ் எடைகள் மற்றும் அளவைகளை மின்னணு முத்திரையிடும் சட்டமுறை எடையளவுப் பிரிவு, 59.37 இலட்சம் ரூபாய் செலவில் கணினிமயமாக்கப்படும்.

**8) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்து மரணம் அடைந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் விபத்து மரண உதவித் தொகை 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில், அவரை இழந்து வாடும் குடும்ப உறுப்பினர்களின் வறிய நிலையினை கருத்தில் கொண்டு, அன்னாரது குடும்பத்தினருக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் விபத்து மரண உதவித் தொகை 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

9) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மகப்பேறு நலத்திட்ட உதவித் தொகை 6,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளர்கள் மகப்பேறு நலத்திட்ட உதவித் தொகையாக தற்பொழுது 6 ஆயிரம் ரூபாய் பெற்று வருகின்றனர். இந்த மகப்பேறு நலத்திட்ட உதவித் தொகை 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால், ஆண்டிற்கு சுமார் 600 பதிவு பெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.

10) கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித் தொகையான ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பினை வீட்டிலிருந்து சென்று படிப்பதற்கு 1,000 ரூபாய் மற்றும் விடுதியில் தங்கி படிப்பதற்கு 1,200 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் தொழிற்கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித் தொகையான, ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பினை வீட்டிலிருந்து சென்று படிப்பதற்கு 1,000 ரூபாய் மற்றும் விடுதியில் தங்கி படிப்பதற்கு 1,200 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால், ஆண்டிற்கு சுமார் 5,000 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன் பெறுவார்கள்.

11) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் திருமண நலத்திட்ட உதவித் தொகை 20,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் திருமண நலத்திட்ட உதவித் தொகையான ஆண்களுக்கு 3,000 ரூபாய் மற்றும் பெண்களுக்கு 5,000 ரூபாய் ஆகியவை 20,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால், ஆண்டிற்கு சுமார் 3,000 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.

**12) அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு "அமைப்புசாரா தொழிலாளர்கள் சேவை செயலி" உருவாக்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள, 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில், புவியிடங்காட்டி அமைப்பு (GPS) வசதியுடன் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப அம்சங்கள் உள்ளடங்கிய "அமைப்புசாரா தொழிலாளர்கள் சேவை செயலி" 4.66 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இதனால், 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற 37 இலட்சம் தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.

**13) அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு QR Code மற்றும் Chip பொருத்திய திறன் அட்டை (Smart Card) வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்றுள்ள தொழிலாளர்களுக்கு, தற்பொழுது பதிவின் போது காகித அடையாள அட்டை வழங்கப்படுகிறது. இதற்கு பதிலாக, தொழிலாளர்களின் வங்கி கணக்கு விபரம், முகவரி, திறன்கள், பணி அனுபவம், பயிற்சி பெற்றமை, நல வாரியங்களிலிருந்து பெற்ற நிதியுதவி போன்ற அனைத்து தகவல்களுடன் கூடிய QR Code மற்றும் Chip பொருத்திய திறன் அட்டை (Smart Card) 27.38 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். இதனால், தொழிலாளர்களுக்கு, புதுப்பித்தல் வசதிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் உடனுக்குடன் கிடைத்திட வாய்ப்பு ஏற்படும். இதனால், சுமார் 37 இலட்சம் பதிவு பெற்ற தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.

14) தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் தொழிலாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் மகப்பேறு நலத்திட்ட உதவித் தொகை 6,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் தொழிலாளர்கள், மகப்பேறு நலத்திட்ட உதவித் தொகையாக தற்பொழுது 6,000 ரூபாய் பெற்று வருகின்றனர். இந்த மகப்பேறு நலத்திட்ட உதவித் தொகை 18,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

15) தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு, தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித் தொகை, ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பினை வீட்டிலிருந்து சென்று படிப்பதற்கு 1,000 ரூபாய் மற்றும் விடுதியில் தங்கி படிப்பதற்கு 1,200 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகள், தொழிற் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித் தொகை, ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பினை வீட்டிலிருந்து சென்று படிப்பதற்கு 1,000 ரூபாய் மற்றும் விடுதியில் தங்கி படிப்பதற்கு 1,200 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

## 16) தொழிலாளர் துறை இணைய முகப்பு (Portal) மற்றும் வலைதளம் (Website) மறுசீரமைக்கப்படும்.

தொழிலாளர் துறையின் வலைதளம் (Website) மற்றும் இணைய முகப்பு (Portal) ஆகியவை புதுப்பித்து மேம்படுத்தப்படும். மேலும், சட்டமுறை எடையளவுச் சட்டத்தின் கீழ் 8 புதிய சேவைகள் இணைய முகப்பில் (Portal) சேர்க்கப்படும். தொழிலாளர் துறையின் வலைதளமானது இருமொழிப் பயன்பாட்டிற்கு ஏற்ப (Bilingual) 2 கோடி ரூபாய் செலவில் வடிவமைக்கப்படும்.

17) தமிழ்நாடு அமைப்பு சாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் 16 இதர நல வாரியங்களுக்கென புதியதாக சொந்த அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 16 நல வாரியங்களின் தலைமை அலுவலகத்திற்கு, அம்பத்தூரில் உள்ள தொழிலாளர் துறைக்கு சொந்தமான இடத்தில் 10 கோடி ரூபாய் செலவில் புதியதாக சொந்த அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

18) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் அமைப்புசார் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தங்குவதற்கென, தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் உள்ள "திரு.வி.க. இல்லம்" எனும் விடுமுறை ஓய்வு இல்லம் புதுப்பிக்கப்படும்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் தென்காசி மாவட்டம், குற்றாலத்தில், அமைப்புசார் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தங்குவதற்கென உள்ள "திரு.வி.க. இல்லம்" எனும் விடுமுறை ஓய்வு இல்லம் 1.82 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்.

19) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் அமைப்புசார் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தங்குவதற்கென, கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள "சிங்காரவேலர் இல்லம்" எனும் விடுமுறை ஓய்வு இல்லத்தில் கூடுதல் படுக்கை வசதிகளுடன் புதிய கட்டடம் கட்டப்படும்.

தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியத்தின் கீழ், கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில், அமைப்புசார் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தங்குவதற்கென உள்ள "சிங்காரவேலர் இல்லம்" எனும் விடுமுறை ஓய்வு இல்லத்தில் கூடுதல் படுக்கை வசதிகளுடன் 2.50 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

20) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பிரதிநிதிகள் தங்குவதற்கென, சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள "ஜீவா இல்லம்" எனும் ஓய்வு இல்லம் கூடுதல் படுக்கை வசதிகளுடன் புதுப்பிக்கப்படும்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் சென்னை, தேனாம்பேட்டையில், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பிரதிநிதிகள் தங்குவதற்கென உள்ள "ஜீவா இல்லம்" எனும் ஓய்வு இல்லம் கூடுதல் படுக்கை வசதிகளுடன் 98.82 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்.

21) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் அமைப்புசார் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தங்குவதற்கென, செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் உள்ள "ஜவஹர்லால் நேரு இல்லம்" எனும் விடுமுறை ஓய்வு இல்லம் புதுப்பிக்கப்படும்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில், அமைப்புசார் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தங்குவதற்கென உள்ள "ஜவஹர்லால் நேரு இல்லம்" எனும் விடுமுறை ஓய்வு இல்லம் 1.75 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்.

**22) கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்களுக்கு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்.**

கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் குறைவான படிப்பு மற்றும் பணியிடத்தில் பணிசெய்யும் பாதுகாப்பு முறை பற்றி அறியாமை ஆகிய காரணங்களினால் ஏற்படும், விபத்து மற்றும் இறப்புகளை குறைப்பதற்கு, தொழிலாளர்களுக்கும், வேலையளிப்பவர்களுக்கும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்கள் 50 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

**23) பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிபுணர்களைக் கொண்டு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்.**

பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் அடிக்கடி தீ மற்றும் வெடிவிபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இதனைத் தடுப்பதற்கு பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கும் மற்றும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், இக்காலத்திற்கு ஏற்றவாறு தொழிற்சாலைகளை அமைத்தல் மற்றும் பாதுகாப்பான உற்பத்தி முறையை கையாளுதல் தொடர்பாக நிபுணர்களைக் கொண்டு விழிப்புணர்வு முகாம்கள் 25 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

**24) பட்டாசு உற்பத்தியில் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு காணொளிக் காட்சியினை (Video) தயாரித்து, சமூக ஊடகங்கள் வாயிலாக வெளியீடு செய்யப்படும்.**

பட்டாசுத் தொழிற்சாலைகளில் அடிக்கடி தீ மற்றும் வெடிவிபத்து நேரிட்டு, அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உயிர் சேதம் ஏற்படுவதால், இதனைத் தடுக்கும் விதமாக, பட்டாசுத் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் பலவிதமான உற்பத்திச் செயல்பாடுகள், விபத்திற்கான காரணங்கள், தொழிற்சாலைகளில் கடைபிடிக்கப்பட வேண்டிய மற்றும் கடைபிடிக்கக்கூடாத செயல்பாடுகள் மற்றும் பின்பற்றப்பட வேண்டிய சிறந்த பாதுகாப்பு நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு காணொளிக் காட்சியினை (Video) 20 இலட்சம் ரூபாய் செலவில் தயாரித்து, சமூக ஊடகங்கள் வாயிலாக வெளியீடு செய்யப்படும்.

## 25) தன்னார்வ பயிலும் வட்டங்களுக்கு திறனறி பலகை (Smart Board) வசதி உருவாக்கப்படும்.

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வரும் அனைத்துவகை போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகளை, வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, மேம்படுத்தி வழங்கும் நோக்கத்துடன், அனைத்து மையங்களுக்கும் 1.03 கோடி ரூபாய் செலவில் திறனறி பலகை (Smart Board) வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

## 26) வேலைவாய்ப்புத் துறையின் செயல் திறனை மேம்படுத்தும் வகையில் துறையின் வலைதளம் மறுசீரமைப்பு செய்யப்படும்.

வேலைவாய்ப்புப் பிரிவின் செயல்பாடுகளான பதிவு செய்தல், புதுப்பித்தல், கூடுதல் பதிவு செய்தல், வேலைநாடுநர்களை பரிந்துரை செய்தல் உள்ளிட்ட அனைத்தையும் கணினிமயமாக்கும் வகையிலும், வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை திட்ட விண்ணப்பங்களை இணையவழியில் சமர்ப்பித்தல் உள்ளிட்ட கூடுதல் சேவைகள் வழங்கும் பொருட்டும், புதிய பாதீடு (New server) மற்றும் மென்பொருள் ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டு, வலைதளம் 1 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைப்பு செய்யப்படும்.

## 27) அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு ஆங்கில மொழித் திறன் பயிற்சி வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள பன்னாட்டு நிறுவனங்கள், அதிக அளவில் தொழிற்சாலைகளை ஆரம்பித்துள்ள நிலையில், உலகளாவிய வேலைவாய்ப்புகளை நமது மாணவர்கள் பெறவேண்டும் எனில் தொழில்நுட்ப பயிற்சியோடு ஆங்கில மொழித்திறன் பயிற்சி வழங்குவதும் அவசியமாகிறது. எனவே, தொழிற்சாலைகளின் சூழலுக்கு ஏற்றவாறு பணிபுரியவும், தகவல்களை சீரிய முறையில் பரிமாறிக் கொள்ள ஏதுவாகவும், அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு ஆங்கில மொழித் திறன் பயிற்சி 8.82 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

28) தேசிய திறன் போட்டிகளில் வென்ற திறன் போட்டியாளர்களுக்கு சிறப்பு திறன் பயிற்சி அளிக்கும் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும், தேசிய திறன் போட்டிகளில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கங்களை வெல்லும் தமிழ்நாட்டை சேர்ந்த போட்டியாளர்களுக்கு பயிற்சி அளித்த தொழில் நிறுவனங்களுக்கு, முறையே, 3 இலட்சம் ரூபாய், 2 இலட்சம் ரூபாய் மற்றும் 1 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படும். இதற்கான செலவினம் 30 இலட்சம் ரூபாய் ஆகும்.

## 29) தமிழ்நாட்டில் திறன் பயிற்சியாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களின் திறன் தொகுப்பு உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டை திறன் மையமாக மாற்றும் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்ற, பல்வேறு துறைகளில் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கும் பொருட்டு, தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs) மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் (Polytechnic Colleges) இருந்து தகுதியான 500 நபர்களுக்கு, பயிற்றுநர்களுக்கான பயிற்சித் திட்டம் (ToT) அந்தந்த துறைத் திறன் குழுமத்தின் மூலமாக வழங்கப்படும்.

மேலும், நடைபெற்ற பயிற்சி திட்டத்தை மதிப்பிடுவதற்கும், பல்வேறு துறைகளில் மதிப்பீட்டாளர்களின் தொகுப்பை உருவாக்குவதற்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் இருந்து தகுதியான 300 ஆசிரியர்களுக்கு, மதிப்பீட்டாளர் பயிற்சித் (ToA) திட்டம் அந்தந்த துறைத் திறன் குழுமத்தின் மூலமாக வழங்கப்படும். இதற்கான செலவினம் 1.12 கோடி ரூபாய் ஆகும்.

30) உட்கட்டமைப்பு, பயிற்சித் தரம் மற்றும் பணியமர்த்தம் அடிப்படையில், தமிழ்நாட்டிலுள்ள திறன் பயிற்சி நிறுவனங்கள் தரவரிசைப் படுத்தப்படும் மற்றும் முதல் மூன்று இடங்களை பெறும் பயிற்சி நிறுவனங்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

மாநிலத்தில் உள்ள திறன் பயிற்சி நிறுவனங்கள், தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் அடிப்படையில், உட்கட்டமைப்பு, கற்பித்தலின் தரம், உபகரணங்களின் தரம், நிறுவனத்தை அணுகும் முறை மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இரண்டாண்டுகளுக்கு மட்டும் பொருந்தும் வகையில் தரவரிசைப்படுத்தப்படும்.

மதிப்பீட்டிற்கான தரமான திறன் பயிற்சி அளவுருக்களை கொண்டிருப்பதற்காக, திறன் பயிற்சி நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பு நிறுவப்படும். தரவரிசையின் அடிப்படையில் சிறந்த மூன்று நிறுவனங்களுக்கு முறையே 1 இலட்சம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும். இதற்கான செலவினம் 2.25 இலட்சம் ரூபாய் ஆகும்.

**சி.வி. கணேசன்**
தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.